# திருவேற்காடு நகராட்சி
## நகர்மன்ற சாதாரணக் கூட்டம்

**2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1ம் நாள் செவ்வாய் கிழமை மாலை 5.30 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**நகராட்சி அலுவலகம்,**
**திருவேற்காடு**
**நாள்: 31.08.2020**

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

---

**பொருள் எண். 1**

இந்நகராட்சியின் ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் 2020 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

தீர்மானம் எண். 1213 பதியப்பட்டது.

---

**பொருள் எண். 2**

இந்நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான ஆகஸ்ட் 2020 மாதத்தின் செலவுச்சீட்டுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

தீர்மானம் எண். 1214 பதியப்பட்டது.

---

**பொருள் எண். 3**

இந்நகராட்சியில் ஆகஸ்ட் 2020ல் பதிவு செய்துள்ள பிறப்பு, இறப்பு, மற்றும் இறந்து பிறந்தகுழந்தைகளின் விவரம் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

தீர்மானம் எண். 1215 பதியப்பட்டது.

---

**பொருள் எண்.4**

திருவேற்காடு நகராட்சி 09.08.2010 முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 62289, தற்போது பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 89167 குடியிருப்புகளின் எண்ணிக்கை 22291 ஆகும். இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 28.82 மெட்ரிக்டன் குப்பைகள் சேகரம் செய்யப்பட்டு நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 7 பசுமை உரகுடில்களில் சேகரம் செய்யப்படுகிறது. மேற்படி பசுமை உரக்குடில்களில் மக்கும் மற்றும் மக்காத என தரம் பிரித்து மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்கப்படுகிறது. மக்காத குப்பைகளை அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை அரக்கோணம், நாவலூர் மற்றும் ரெட்ஹில்ஸ் ஆகிய பகுதிகளுக்கு தனியார் நிறுவனங்களில் திரவப்பொருளாக பயன்படுத்தப்படுவதால் நகராட்சி பகுதியிலிருந்து நாவலூர் தனியார் நிறுவனங்களுக்கு குப்பைகள் எடுத்து செல்வதற்கு 144 தடை உத்திரவு அமுலில் உள்ளதால் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட வழிவகை இல்லை எனவே ஏற்கனவே நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் **திரு.என்.செல்வராஜ்** என்பவருக்கு இந்நகர்மன்ற தீர்மான எண் முறையே எண்.1015 நாள்.28.02.2020. அனுமதி அளிக்கப்பட்டுள்ளது மேலும், நகர்மன்ற தீர்மான எண்.1056 நாள் 31.03.2020 –ன் நகர்மன்ற

தீர்மான எண்.1081 நாள் 28.04.2020 மற்றும் நகர்மன்ற தீர்மானம் எண்.1178, நாள்.30.06.2020–ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது துப்புரவு ஆய்வாளரின் 10.08.2020 ஆம் தேதிய குறிப்பின்படியும் ஏற்கெனவே மேற்படி பணிக்கான விலைவிகித அடிப்படையிலும் பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி பணிகள் மேற்கொள்ள ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, ஏற்கெனவே பணி மேற்கொண்ட **திரு.என்.செல்வராஜ்** என்பவருக்கே பணி வழங்கிடவும் நகராட்சி பகுதியில் கோலடி பகுதியில் உள்ள மறுசுழற்சி செய்ய இயலாத மக்காத கழிவுகளை அகற்றிட பணி மேற்கொள்வதற்கும் மற்றும் இதற்கென ஆகும் தோராய செலவீனம் ரூ.9.90 இலட்சத்திற்கு வருவாய் நிதியில் செலவீனம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.
(ந.க.எண்.2283/2019)

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.
தீர்மானம் எண். 1216 அனுமதிக்கப்பட்டது.

---

## <u>பொருள் எண்.5</u>

திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இந்நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் (Covid 19) தொற்றுநோய் பரவாமல் தடுக்க நகராட்சி பகுதியில் பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள **தேவையான அளவு கிருமி நாசினியை உற்பத்தி செய்யும் தானியங்கி இயந்திரம்** கொள்முதல் செய்திட தற்போது, மத்திய, மாநில அரசுகளின் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர காலதாமதமாகும் என்பதாலும், கொரோனா வைரஸ் தொற்று நோய் அதிகமாக பரவும் காலமாக உள்ளதாலும், பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருதியும், விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள நகராட்சி ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, **தேவையான அளவு கிருமி நாசினியை உற்பத்தி செய்யும் தானியங்கி இயந்திரம்** கொள்முதல் செய்யவும், இதற்கென ஆகும் தோராய செலவீனம் ரூ.3.10 இலட்சத்திற்கு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதையும் மன்றம் பதிவு செய்யலாம்.
தீர்மானம் எண். 1217 அனுமதித்து பதியப்பட்டது.

---

## <u>பொருள் எண்.6</u>

திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இந்நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் (ஊடிஎனை 19) தொற்றுநோய் பரவாமல் தடுக்க நகராட்சி பகுதியில் பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளவும் அலுவலகத்திற்கு வரும் பொது மக்கள் **சானிட்டைசர்** கொண்டு கைகளை கழுவ செய்யும் **தானியங்கி இயந்திரம்** கொள்முதல் செய்திட இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் 07.08.2020 தேதிய குறிப்பு வழங்கப்பட்டதை தொடர்ந்து, தற்போது, மத்திய, மாநில அரசுகளின் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர காலதாமதமாகும் என்பதாலும், கொரோனா வைரஸ் தொற்று நோய் அதிகமாக பரவும் காலமாக உள்ளதாலும், பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருதியும், விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள நகராட்சி ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, **சானிட்டைசர்** கொண்டு கைகளை கழுவ செய்யும் **தானியங்கி இயந்திரம்** கொள்முதல் செய்யவும், இதற்கென ஆகும் தோராய செலவீனம் ரூ.25000/– ஆயிரத்திற்கு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2312)

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

---

தீர்மானம் எண். 1218 அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.7</u>**

நகராட்சி பகுதியில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு கொரோனா பரவாமல் பாதித்த பகுதிகளில் பணியாற்றவும், வீட்டிலிருந்து வரும்போதும் மற்றும் பணி முடித்து வீட்டிற்கு செல்லும்போதும் காவல்துறை சோதனையின்போது மிகவும் சிரமம் ஏற்படுவதால் நகராட்சி பெயர் பொறித்த இருளிலும் சுடர்விடும் வண்ண ஆடைகள் கொள்முதல் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தகவலுக்கும் மற்றும் முடிவிற்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | வாடகை வாகனம் | தொகை |
|---|---|---|---|
| 1. | SVN Enterprises,<br>No.55, Perumal Kovil Street,<br>Pilllaiyar madamthangal,<br>Thiruverkadu, Chennai-77. | தூய்மை பணியாளர்கள் பணியின் போதும் மற்றும் வீட்டிலிருந்து பணிக்கு வரும்போதும் வீட்டிற்கு திரும்ப செல்லும் போதும் காவல்துறை சோதனைக்கு உட்பட நகராட்சி பெயர் பொரித்த இருளிலும் ஒளிரும் சுடர்வண்ண ஆடைகள் சப்ளை 1 ஆடைகள் ரூ.250/– | ரூ.250/– |
| 2. | M/S Arun,<br>No.16/11 8th Cross Street,<br>Venkatasubramanian Nagar,<br>Valasaravakkam , Chennai-87. | | ரூ.290/– |
| 3. | G. Mathivelan,<br>No.5, Egathaman Kovil Street,<br>Thandarai. | | ரூ.275/– |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான **SVN Enterprises** நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கவும் மற்றும் பணி உத்திர. வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண். 1219 அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.8</u>**

இந்நகராட்சிக்கு புதியதாக கட்டப்பட்டுள்ள அலுவலக கட்டிடத்திற்கு பொது நிதி 2020–2021ன் கீழ் அலுவலக வளாக பகுதியினை சுற்றி LED மின்விளக்குகள், பல்வேறு பிரிவுகளுக்கு தேவையான அலுமினியம் தடுப்புகள் மற்றும் LED நகராட்சி பெயர் பலகை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்

ஆ) மேற்கண்ட அலுவலக கட்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண். 1220 (அ) (ஆ) அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.9</u>**

திருவேற்காடு நகராட்சி 28.50 சதுர கி.மீ பரப்பளவு கொண்டு 18 வார்டுகளை உள்ளடக்கிய தேர்வு நிலை நகராட்சியாக உள்ளது. இந்நகராட்சியின் மக்கள் தொகை 2011 கணக்கெடுப்பின்படி 62289, தற்போதை மக்கள் தொகை 2017ம் ஆண்டு மேற்பார்வையாளர்கள் மற்றும் பரப்புரையாளர்களின் கணக்கெடுப்பின்படி 89164 ஆகும். இந்நகராட்சியில் மொத்தம் 38 பூங்காக்கள் கண்டறியப்பட்டு, அப்பூங்காவில் அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் கீழ்க்கண்ட 21 எண்ணிக்கையிலான பூங்கா பணிகள் முடிக்கப்பட்டு தற்போது பொது மக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

இந்நிலையில் தற்போது மேற்கண்ட பூங்காக்களை பாதுகாக்க இந்நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால், மேற்கண்ட பூங்காக்களின் தூய்மை பணியினை அவசியம் கருதில் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களின் 2019–20ம் ஆண்டின் செந்தார விலைபட்டியலின்படி ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை பணியமர்த்தி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், அதற்காக கீழ்க்கண்டவாறு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண். | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 1, 2 ,3,4(ம) 5 | நியூ சென்சூரியன் அவென்யூ பூங்கா, நியூ சென்னை மெட்ரோ சிட்டி பூங்கா, கீசன் நகர் பூங்கா, ஐஸ்வர்யா நகர் பூங்கா மற்றும் ராஜாங்குப்பம் மெட்ரோ சிட்டி பூங்காக்களை பாதுகாக்க தேவையான காவலர் சப்ளை செய்தல். | 9.00 |
| 2. | 6, 7,8 ,10 (ம) 11 | வி.ஜி.என் மகாலட்சுமி நகர் பூங்கா, நூம்பல் மகாலட்சுமி நகர் பூங்கா நூம்பல் ஐ.சி.எல் காலனி பூங்கா, கேந்திரிய விஹார் பூங்கா, கோ–ஆப்ரேடிவ் நகர் பூங்கா,கோ–ஆப்ரேடிவ் நகர் அறிஞர் அண்ணா பூங்காக்களை பாதுகாக்க தேவையான காவலர் சப்ளை செய்தல். | 9.00 |
| 3. | 12 ,14 (ம) 15 | பல்லவன் நகர் பூங்கா, பாரதி நகர் பூங்கா, கற்பகாம்பாள் நகர் பூங்கா, கீரின் பார்க் பூங்கா ,மகாலட்சுமி நகர் பூங்கா மற்றும் சூரிய நாராயணன் நகர் பூங்காக்களை பாதுகாக்க தேவையான காவலர் சப்ளை செய்தல். | 9.00 |
| 4. | 16 (ம) 17 | காடுவெட்டி காயத்திரி நகர் பூங்கா, TTS நகர் பூங்கா மற்றும் பாலகிருஷ்ணா நகர் பூங்காக்களை பாதுகாக்க தேவையான காவலர் சப்ளை செய்தல். | 4.50 |

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண். 1221 (அ) (ஆ) அனுமதிக்கப்பட்டது.

---

**<u>பொருள் எண்.10</u>**

இந்நகராட்சியில் குடிநீர் திட்டம் ஏதுமில்லாத காரணத்தினால், நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் மின்மோட்டார்கள் பொருத்தப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ள சில இடங்களில் குடிநீர் தரம் போதுமானதாக இல்லாத காரணத்தினால் கோலடி ஏரி பகுதியின் அருகே அமைக்கப்பட்டுள்ளஆழ்துளை குழாய் கிணற்றிலிருந்து நகராட்சிக்கு சொந்தமான 2 குடிநீர் லாரிகள் மூலம் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், குடிநீர் ஆதாரம் நல்ல நிலையில் இல்லாத பகுதிகளுக்கு 2 எண்ணிக்கை தனியார் லாரிகளை கொண்டு குடிநீர் விநியோகம் செய்யப்படும். கடந்த ஜுலை மாதத்துடன் ஆண்டு பராமரிப்பு முடிவுற்றுள்ளது. நகராட்சி லாரிகளை கொண்டு அப்பகுதிகளுக்கு தற்காலிகமாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் பல இடங்களில் குடிநீர் சீரான நிலையில் வழங்கப்படாததால் பொதுமக்கள் புகார் அளித்துள்ளனர். எனவே, குடிநீர் ஆதாரம் இல்லாத பகுதிகளுக்கு தனியார் லாரி மூலம் குடிநீர் வழங்கிட அதற்கான தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண். 1222 (அ) (ஆ) அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண்.11

இந்நகராட்சி சொந்தமான குடிநீர் டேங்கர் லாரி வாகன பதிவு எண்.TN 20 AJ 7477 என்ற வாகனத்தில் பழுது ஏற்பட்டுள்ளதாகவும், மேற்படி பழுதுகளை சரி செய்து தர கோரிய ஓட்டுநர் கடிதம் அளித்துள்ளதுள்ளதை தொடர்ந்து, மேற்கண்ட வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ய உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரியதில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | விலைப்புள்ளி பெறப்பட்ட நிறுவனத்தின் விபரம் (ரூபாயில்.) | |
|---|---|---|---|
| | | **M/s.Sri Ram's Body Builders, No.9/1, Thanigai Garden, Vetthalai Thottam, Sennerkuppam, (Avadi Main Road), Poonamallee, Chennai-56** | **M/s.Saravanan Body Works, No.3/715, Palani Mudali Street, Kuppasamy Nagar, Sannerkuppam, Chennai-56** |
| | | **Amount (Rs.)** | **Amount (Rs.)** |
| 1. | திருவேற்காடு நகராட்சி சொந்தமான குடிநீர் லாரி வாகன பதிவு எண்.TN 20 AJ 7477-ல் என்ற வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்தல். | 15500.00 | 20200.00 |
| 2. | சரக்கு மற்றும் சேவை வரி (18 %) | 2790.00 | 1296.00 |
| | **மொத்தம்** | **18290.00** | **21496.00** |

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்படி பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **M/s.Sri Ram's Body Builders**, நிறுவனத்தார் அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தினை கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்படி செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண். 1220 அ ஏற்கப்படுகிறது.

## பொருள் எண்.12

இந்நகராட்சியில் எல்லைக்குட்பட்ட வார்டு எண்.9—ல் உள்ள புளியம்பேடு குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால்வாய் வசதி இல்லாததால், சாலையில் மழைநீர் தேங்கி, பொதுமக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் இடையூறாகவும், பொது சுகாதார கேடு விளைவிக்கும் வகையில் உள்ளது. எனவே, மேற்கண்ட பகுதியில் மழைநீர் வடிகால்வாய் வசதி அமைக்கும் பணியினை மேற்கொள்ள அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.18.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண். 1224 (1) ம (2) அனுமதிக்கப்பட்டது.

## பொருள் எண்.13

இந்நகராட்சியில் எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3—ல் உள்ள வானகரம்—அம்பத்தூர் சாலையில் (மாந்தோப்பு சாலை சந்திப்பு) மழைநீர் வடிகால்வாய் வசதி இல்லாததால், சாலையில் மழைநீர் தேங்கி, பொதுமக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் இடையூறாகவும், பொது சுகாதார கேடு விளைவிக்கும் வகையில் உள்ளது. எனவே, மேற்கண்ட பகுதியில் மழைநீர் வடிகால்வாய் வசதி அமைக்கும் பணியினை மேற்கொள்ள அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2. மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண். 1225 (1) ம (2) அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண்.14

இந்நகராட்சியில் எல்லைக்குட்பட்ட அண்ணா தெரு, கற்பகாம்பாள் நகர் மற்றும் கோ–ஆப்ரேடிவ் நகர் ஆகிய பகுதிகளில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பகுதிகளில் குடிநீர் வசதிக்கான பைப் லைன் இல்லாததால், சீரான குடிநீர் விநியோகம் மேற்கொள்ள தேவையான பைப்லைன் வசதி அமைத்துக்கொள்ளவும், அண்ணா தெரு பகுதியில் பைப் லைன் பணி மேற்கொள்ளும் போது ஏற்படும் சேதத்தினை பேவர் பிளாக் சாலையாக அமைத்துக்கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2. மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண். 1226 (1) ம (2) அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண்.15

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 4வது வார்டு பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளதால் மேற்படி பகுதிகளில் சீராக குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலையில் உள்ளது. எனவே, மேற்படி பகுதியில் ஆழ்துளை குழாய் கிணறுகள் புதிதாக அமைத்திடவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.1.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அ)** அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** மேற்படி பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண். 1225 (அ) ம (ஆ) அனுமதிக்கப்பட்டது.

---

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

/உண்மை நகல்/
ஆணையர்
திருவேற்காடு நகராட்சி.